**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2019**

**A051 மொழிவரலாறு – 1**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. பகுபதம் என்றால் என்ன?
3. பேச்சுறுப்புகளை வேறு எந்த பெயரால் குறிப்பிடுகிறோம்?
4. உலக மொழியில் உள்ள மூன்று எழுத்து முறைகள் யாவை?
5. நிரைக் குறிக்கும் சொற்களில் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.
6. மெய்க்கீர்த்தி என்றால் என்ன?
7. அகராதியைக் குறிக்கும் வேறு சொற்கள் யாவை?
8. குகைக் கல்வெட்டுகளைப் படிப்பதில் உள்ள இடர்பாடுகள் பற்றிக் கூறியவர் யார்?
9. இதழ்குவி முயற்சியால் பிறக்கும் உயிர் எழுத்துகள் யாவை?
10. மல்லல், மழ, யவணர் – இவற்றிற்குக் கூறப்படும் பொருள்களைக் குறிப்பிடுக.
11. சங்கம் மருவிய காலம் எவ்வாறு கருதப்பட்டது?
12. பதிலீடு பெயர்கள் யாவை?
13. சோழர்காலத்து இலக்கண நூலகள் யாவை?
14. சரசுவதி மகாலை உருவாக்கிய மராட்டிய மன்னர் யார்?
15. தமிழ் மொழியில் முதன் முதலில் எழுதப்பெற்ற உரை யாது?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. மாத்திரை என்றால் என்ன?
2. சார்பெழுத்தின் வகைகளைக் குறிப்பிடுக.
3. திராவிட மொழிகளின் பண்புகள் மூன்றினைக் கூறுக.
4. முள் + தீது = முட்டீது, முஃடீது – இச்சொற்கள் புணர்ச்சியில் எவ்வாறு திரிபடைகின்றன?
5. தெரிநிலை வினை என்றால் என்ன?
6. இயற்பெயரையும் சிறப்புப் பெயரையும் எவ்வாறு கூறவேண்டும்? சான்று தருக.
7. சோழர்காலத் தமிழை அறிய உதவும் சான்றுகள் யாவை?
8. சி.பா. ஆதித்தனாரின் மொழிக்கோட்பாடு யாது?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) மொழியின் வகைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் ஒலி அமைப்பு முறையை விளக்குக.

2. (அ) உயிரொலி, மெய்யொலிகளின் பிறப்பு குறித்து விளக்கி வரைக.

(அல்லது)

(ஆ) வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத்தம் குறித்து விளக்குக.

3. (அ) மராட்டியர் காலத் தமிழில் வேற்றுமொழிச் சொற்களின் ஆதிக்கம் குறித்து கட்டுரை வடிவில் விடை தருக.

(அல்லது)

(ஆ) இதழியலாளர்கள் பயன்படுத்தும் மொழிநடையின் தன்மைகளைக் குறித்து விளக்கம் தருக.

***